**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டம் – 2014–2015 ஆம் நிதியாண்டில் விடுபட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ரூ.28,20,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை ( நிலை) எண் 5** | **நாள் 12.02.2016**

**மன்மத–தை 29,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.41, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 01.07.2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.2512/மாதிந.2.1/2015, நாள் 26.11.2015.

----------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தினை, 2014–2015ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்திட, 216 சிறப்புப் பள்ளிகளில் உள்ள 622 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.10,000/– என்ற வீதத்தில், 12 மாதங்களுக்கு ஊதிய மானியம் வழங்க ரூ.7,42,30,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தின்படி 2014–2015ஆம் ஆண்டில் விடுபட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் 8 சிறப்புப் பள்ளிகளில் உள்ள 24 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.10,000/– என்ற வீதத்தில், கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 12 மாதங்களுக்கு ஊதிய மானியம் வழங்க ரூ.28,20,000/– கூடுதல் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்:-

| வ. எண் | தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பெயர் | சிறப்பு ஆசிரியர் / தசைப் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் 12 மாதங்களுக்கு | அரசு அங்கீகாரம் பெற்ற காலம் |
|---|---|---|---|---|
| | **சென்னை** | | | |
| 1 | மைத்ரி மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, கே. கே. நகர், சென்னை. | 3 | ரூ.3,60,000/– | 01.02.2014 – 31.01.2017 |

[த.பி.பா]

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | கருணா மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, சென்னை. | 3 | ரூ.3,60,000/– | 11.01.2014 – 17.10.2016 |
| | **கடலூர்** | | | |
| 3 | ஸ்ரீ சிவசக்தி மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, கடலூர். | 3 | ரூ.3,60,000/– | 15.12.2013 – 05.01.2017 |
| 4 | தயா மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, கடலூர். | 3 | ரூ.3,60,000/– | 01.03.2014 – 10.06.2016 |
| | **இராமநாதபுரம்** | | | |
| 5 | சி.எஸ்.ஐ. நேசக் கரங்கள் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, இராமநாதபுரம் | 3 | ரூ.3,60,000/– | 01.11.2014 – 02.03.2017 |
| 6 | கருணை இல்லம், மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, இராமநாதபுரம் | 3 | ரூ.3,60,000/– | 28.11.2013 – 12.06.2016 |
| | **நீலகிரி** | | | |
| 7 | டிசல்வா மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, நீலகிரி. | 3 | ரூ.3,00,000/– | 28.02.2013 – 31.12.2015 |
| | **கோயம்புத்தூர்** | | | |
| 8 | ஆசிர்வாத் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, கோயம்புத்தூர். | 3 | ரூ.3,60,000/– | 19.08.2013 – 04.11.2015 |
| | **மொத்தம்** | **24** | **ரூ.28,20,000/–** | |

3. மேற்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தின்படி 2014–2015 ஆம் ஆண்டில் விடுபட்ட பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் 8 சிறப்புப் பள்ளிகளில் உள்ள 24 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.10,000/– என்ற வீதத்தில், 12 மாதங்களுக்கு ஊதிய மானியம் ரூ.28,20,000/–, 2015–2016ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட மதிப்பீடு தொகை ரூ.16,26,04,000/–க்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 101–மாற்றுத் திறனாளிகள் நலன் – II–மாநிலத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டம் பணிகள் – MG–மனவளர்சசி குன்றியோருக்கான நிதியுதவி – 09–உதவித் தொகை – 01–நடப்புச் செலவுக்கான உதவித் தொகை. (த.தொ.கு.2235–02–101–MG–0914).”**

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 71700/நிதி(சந)/2015, நாள் 09.02.2016–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்**

முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதித் (சமூக நலம்)துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்